***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

-----

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.***

| | | |
|---|---|---|
| *Case Number* | : | CC.252/2023 |
| *Prosecution Witness* | : | அ.சா. 2 |
| *Name* | : | ராஜேஸ்வரி |
| *Father's/Husband Name:* | : | மயில்வாகனன் |
| *Address :* | : | நாச்சிப்பட்டி, மாவத்தூர் அஞ்சல், தரகம்பட்டி, குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம் |
| *Age* | : | 48 /2024 |

தேதி: 20/02/2024

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **(1,5,6 எதிரிகள் ஆஜர், 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை.)கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந் வருகிறேன். எனது சொந்த ஊர் பெரம்பலுாரில் உள்ள துறைமங்கலம். தற்போது திருமணமாகி கரூரில் நான்

UNIT PUBLR

வசித்து வருகிறேன். எனது தாயாரின் பெயர் தைலம்மாள். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனது அம்மா தைலம்மை பெயரில் எளம்பலூர் கிராமத்தில் சர்வே எண் 384 ல் 1.4 ஏக்கர் பரப்பளவில் நிலம் இருந்தது. அது குறித்து எனது தாயார் ஒரு பொது அதிகார பத்திரத்தை தாயுமானவர் என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். பின்பு அந்த தாயுமானவர் இறந்து விட்டார். அதில் மனை எண் 7 எனக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தை விற்பதற்கு எனது தாயார் எனக்கு ஒரு பொது அதிகாரம் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தார். 2011 ஆம் ஆண்டு காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து விசாரணைக்காக என்னை அழைத்தனர். அப்போது அந்த இடத்தை யாருக்காவது எழுதிக் கொடுத்தீர்களா என விசாரித்தனர். அப்போது நானோ எனது அம்மாவோ யாருடைய பெயரிலும் அந்த இடத்தை எழுதிக் கொடுக்கவில்லை என விசாரணையின் போது கூறினோம். புல எண் 384/6 ல் 8 மனைகளை ரங்காராஜ் மகன் பிச்சமுத்து என்பவர் எனது

அம்மாவின் புகைப்படத்தை ஒட்டி எனது அம்மா ஆவணத்தை ஏற்படுத்தியது போன்று வேறு நபர்களின் கையொப்பங்களை பெற்று அந்த இடங்களை விற்றுள்ளார் என எங்களுக்குத் தெரிய வந்தது. அதனால் விசாரணையின் போது எனது அம்மாவின் கை ரேகையையும் எனது கை ரேகையையும் போலீசார் பெற்றனர். இது குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை 1,3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் :**

1.எனது தாயார் தைலம்மை 17/05/2021 அன்று இறந்து விட்டார். போலீசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் தேதி, மாதம், வருடம் நினைவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் உண்மையிலேயே விசாரித்திருந்தால் எனக்கு தேதி நினைவிருக்கும் என்றாலும் தேதி நினைவிருக்கும் என்றாலும் சரியல்ல. எனது தாயார் எந்த சர்வே எண்ணில் சொத்தை வாங்கினார் என எனக்கு நினைவில்லை. நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த

UNPUBLR

வாக்குமூலத்தில் " எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட எளம்பலூர் கிராம எல்லையிலுள்ள அயன் புஞ்சை சர்வே எண் 384/3 ல் 1 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை துறைமங்கலத்தை சேர்ந்த வார்டு எண் 14 ஒளவையார் தெருவில் வசிக்கும் தாயுமானவர் என்பவருக்கு பொது அதிகாரப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தார் " என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதே வாக்குமூலத்தில் "எளம்பலூர் சர்வே எண் 384/6 ல் எங்களுக்கு எந்த நிலமும் இல்லை " என குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். அந்த 1 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை எனது தாயார் யாரிடம் வாங்கினார் என்றால் எனக்குத் தெரியவில்லை.

(2) என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 1739/1980 ல் 1980 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலுகா துறைமங்கலம் கிராமத்தில் இருக்கும் செல்லமுத்து மனைவி தேவேந்திரகுலம் தைலம்மை அவர்களுக்கு ஷை துறைமங்கலம்

JMI PBLR

கிராமத்திலிருக்கும் லெட்சுமணன் குமாரர் விவசாயம் செல்லமுத்து என்பவர் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். சர்வே எண்.384 ல் ஏக்கர் 8.31 ல் ஒந்தாயி அம்மாள் நிலத்திற்கும் மேற்கு, வடக்கு, முத்துசாமி நிலத்திற்கும், தாதன் நிலத்திற்கும் கிழக்கு, மூக்ககவுண்டன் நிலத்திற்கும் மருதை கவுண்டர் நிலத்திற்கும் தெற்கு, இதில் 1.40 தற்கால சப்டிவிசன் படி சர்வே எண்.384/6 ஏக்கர் 1.40 ல் உள்ளது ஷை சொத்து எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது அம்மாவிற்கு புல எண் 384/3 ல் எந்த சொத்தும் கிடையாது என்றாலும் எனது அம்மாவின் சொத்து புல எண் 384/6 ல் மட்டும் தான் 1.4 ஏக்கர் சொத்து கிரயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அம்மாவும் நானும் ஏற்படுத்தியதாக கூறப்படும் பொது அதிகாரப் பத்திரத்தில் நாங்கள் தான் தவறுதலாக சர்வே எண்ணை 384/3 என குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல.எனது தாயார் தாயுமானவர் பெயரில் ஏற்படுத்தியதாகக் கூறப்படும்

பொது அதிகாரப் பத்திரத்திலும் தவறுதலாக சர்வே எண்ணை 384/3 என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் தாரர் எதிரிகள் மீது பொய்யான புகாரைக் கொடுத்துள்ளார் என்றாலும் அதை அனுசரித்து நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் நான் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது தாயாரின் இறந்த தேதியை 2021 ஆம் ஆண்டு என தவறாகக் குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 5 ஆம் எதிரி தரப்பில்**

1.எனது தாயார் தைலம்மை 17/05/2021 அன்று இறந்து விட்டார். போலீசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் தேதி, மாதம், வருடம் நினைவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் உண்மையிலேயே விசாரித்திருந்தால் எனக்கு தேதி நினைவிருக்கும் என்றாலும் தேதி நினைவிருக்கும் என்றாலும் சரியல்ல. எனது தாயார் எந்த

சர்வே எண்ணில் சொத்தை வாங்கினார் என எனக்கு நினைவில்லை. நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் " எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட எளம்பலூர் கிராம எல்லையிலுள்ள அயன் புஞ்சை சர்வே எண் 384/3 ல் 1 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை துறைமங்கலத்தை சேர்ந்த வார்டு எண் 14 ஔவையார் தெருவில் வசிக்கும் தாயுமானவர் என்பவருக்கு பொது அதிகாரப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தார் " என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதே வாக்குமூலத்தில் "எளம்பலூர் சர்வே எண் 384/6 ல் எங்களுக்கு எந்த நிலமும் இல்லை " என குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். அந்த 1 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை எனது தாயார் யாரிடம் வாங்கினார் என்றால் எனக்குத் தெரியவில்லை.

(2) என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 1739/1980 ல் 1980 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி ஜில்லா

JM PUBLR

பெரம்பலூர் தாலுகா துறைமங்கலம் கிராமத்தில் இருக்கும் செல்லமுத்து மனைவி தேவேந்திரகுலம் தைலம்மை அவர்களுக்கு ஷை துறைமங்கலம் கிராமத்திலிருக்கும் லெட்சுமணன் குமாரர் விவசாயம் செல்லமுத்து என்பவர் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். சர்வே எண்.384 ல் ஏக்கர் 8.31 ல் ஒந்தாயி அம்மாள் நிலத்திற்கும் மேற்கு, வடக்கு, முத்துசாமி நிலத்திற்கும், தாதன் நிலத்திற்கும் கிழக்கு, மூக்ககவுண்டன் நிலத்திற்கும் மருதை கவுண்டர் நிலத்திற்கும் தெற்கு, இதில் 1.40 தற்கால சப்டிவிசன் படி சர்வே எண்.384/6 ஏக்கர் 1.40 ல் உள்ளது ஷை சொத்து எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது அம்மாவிற்கு புல எண் 384/3 ல் எந்த சொத்தும் கிடையாது என்றாலும் எனது அம்மாவின் சொத்து புல எண் 384/6 ல் மட்டும் தான் 1.4 ஏக்கர் சொத்து கிரயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அம்மாவும் நானும் ஏற்படுத்தியதாக கூறப்படும் பொது அதிகாரப் பத்திரத்தில் நாங்கள் தான்

UNPUBLISHED

தவறுதலாக சர்வே எண்ணை 384/3 என குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல.எனது தாயார் தாயுமானவர் பெயரில் ஏற்படுத்தியதாகக் கூறப்படும் பொது அதிகாரப் பத்திரத்திலும் தவறுதலாக சர்வே எண்ணை 384/3 என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் தாரர் எதிரிகள் மீது பொய்யான புகாரைக் கொடுத்துள்ளார் என்றாலும் அதை அனுசரித்து நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் நான் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது தாயாரின் இறந்த தேதியை 2021 ஆம் ஆண்டு என தவறாகக் குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

போலியாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என பிற நபர்கள் கூறியதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் சரிதான். ஏனென்றால் எனக்கு போலீசார் தான் கூறினர். எனது தாயார் தைலம்மாள் ஆவண எண் 1739/1980 அடிப்படையில் தான் 389/4/2010 என்ற ஆவணத்தை 5 ஆம்

எதிரி பதிவு செய்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. 5 ஆம் எதிரி எந்த வித முறைகேட்டிலும் ஈடுபடவில்லை என்றாலும் சார்பதிவாளர் என்ற முறையில் அவரது பணியை சட்டமுறைப்படி செய்து வந்தார் எனவும் அவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் எனக்கு அது பற்றி தெரியாது.

*Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.*

sd/-

*Judicial Magistrate No.I,*

*Perambalur.*

JM-I, PBLR